தினமலர்
உண்மையின் உரைகல்
மே 14,2015 IST
உலக தமிழர் செய்திகள்

# சிங்கப்பூரில் இறகுப் பந்துப் போட்டி

திருச்சி ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் சிங்கப்பூர் கிளை , தனது இலக்கிய - சமுதாய சேவையுடன் விளையாட்டுத் துறையிலும் தடம் பதித்து வருகிறது . சிங்கப்பூருக்குப் பெருமை சேர்க்கும் முறையில் , ஆரோக்கிய வாழ்விற்கு வழி காட்டும் வகையில் மே மாதம் 9 ஆம் தேதி , பெக் கியோ சமூக மன்ற அரங்கில் " ஜமாலியன் இறகுப் பந்துப் போட்டியை " நடத்தியது . நாற்பது போட்டியாளர்கள் கலந்து கொண்டனர் . இந்திய முஸ்லீம் பேரவையின் துணைத் தலைவரும் , சிங்கப்பூர் தோப்புத்துறை முஸ்லீம் சங்கத்தின் தலைவருமான டாக்டர் கே . எம் . தீன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார் . சங்கத்தின் சிறப்பான பணிகளைப் பாராட்டி வெற்றி பெற்ற வீரர்களுக்கு கோப்பைகளையும் , சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தார் .சங்கத் தலைவர் டாக்டர் எம். எ . காதர் அனைவரையும் வரவேற்று நன்றி நவில நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது .- ***நமது செய்தியாளர் வி.புருஷோத்தமன்***